குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 77–2014

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ஆனந்த்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. சத்தியநாராயணன் |
| ஊர் | : | அத்திமுகம் |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 52 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 10.02.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் அத்திமுகம் கிராமத்தில் குடியிருந்து கேபிள் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. கடந்த 2010 ஆண்டு ஒரு நாள் என்னுடைய மாமியார் வீட்டிற்கு செல்ல நான் என்னுடைய இருச்சக்கர வாகனத்தில் என் மாமியார் ஊர் நோக்கி சென்று கொண்டு இருந்த போது அத்திமுகத்தில் இருந்து செட்டிபள்ளிக்கு செல்லும் சாலையில் இடையில் உள்ள ஆஞ்நேயர் கோயில் அருகே இரண்டு இருச்சக்கர வாகனத்தில் வந்த 4 நபர்கள் ஒசூர் செல்ல வழி கேட்பது போல் என்னிடம் வந்து கேட்டு

என்னுடைய வாகன சாவியை எடுத்துக்கொண்டு அதில் இருந்த ஒருவர் என் கழுத்தில் இருந்த சுமார் 2 சவரன் தங்க செயினை பறிக்க முயற்சித்த போது நான் அவர்களை தள்ளிவிட்டு சற்று நகர்ந்த போது அங்கிருந்தவர்கள் பார்த்துவிட்டு வந்து எனக்கு உதவ அவர்களுடன் சேர்ந்து என்னிடம் செயின் பறிக்க முயன்ற 3 நபர்களை பிடித்து அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு சென்று அவர்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி நான் புகார் மனு கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் நகை பறிக்க முயன்ற 3 நபர்களை என்னிடம் அடையாளம் காட்ட இயலும் ஆஜர் 1 முதல் 3 எதிரிகள்தான் நகைப்பறிக்க முயன்ற நபர்கள். எதிரிகள் உபயோகித்த வாகனம் பற்றி எனக்கு தற்போது நினைவில் இல்லை. வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரனை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் 12ம் வரை படித்துள்ளேன். மொத்தம் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 4 நபர்கள் வந்தார்கள். அந்த 4 நபர்களும் தனிதனி வாகனத்தில் வந்தார்கள் என்றால் இல்லை இரண்டு வாகனத்தில் வந்தார்கள். எந்தெந்த வாகனத்தில் யார் யார் வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் அணிந்து இருந்தா செயினை பறித்துக்கொண்டு சென்று விட்டார்களா என்றால் ஆமாம். செயினை யார் பறித்துக்கொண்டு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த செயின் மீண்டும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். இந்த விவரத்தை தான்

புகார் மனுவில் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் கண்ட 2 முதல் 9 வலையிலான நபர்கள் என்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் அவர்கள் என்னுடைய நண்பர்கள். சாட்சி பட்டியலில் கண்ட 2 முதல் 9 நபர்கள் அனைவரும் நான் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்ற போது என்னுடன் வந்தார்கள் என்றால் சரிதான். புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றாலும் என்னுடைய செயினை நான் எங்கேயோ தொலைத்துவிட்டு எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

சாட்சி கூறியதை என்னால்
தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால்
தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால்
படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**